இந்நூலில் உள்ள பாடல்கள் முதலில் சுவாமிகள் இயற்றியவாறும் பின்பு சித்தாந்த செல்வர், அருநூற்புலமை ஆன்றோர் பேராசிரியர் டாக்டர் ப. இராமன், அவர்களின் வழிகாட்டுதல் பெயரில் இப் பாடல் என்னைப் போல் எளியவர் படிப்பதற்கு ஏற்றவாறு பிரித்தும் அந்த பாடல்களுக்கு விளக்கங்களும் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாற பிரித்து கொடுப்பது எளிய முறையில் கற்றுக் கொள்ளுவதற்கு மட்டும் தான் பயன்படுத்தப்பட வேண்டும்.

## 25. உட்பகை ஒழிக்கமனு

### நாற்பத்தெண்சீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

அங்கமுடை யங்கதே சத்திலள வற்றவறி
வானந்த வாரிகவியும்

அனாதியா யுளதிரு வனந்தபுரம் வதிதந்
ததீதமணி மௌலிசூடி

அல்லலை யொழித்தினிய வமிதழ்த்தை யூட்டுநிலை
யறனெனுங் கோல்பிடித்துள்

அறிவரும் பேரருளி னாலிலகு மொருசுத்த
வரியா சனத்தினிதிருந்

தண்டரடி பரவிடவு மன்பரக மகிழ்வுறவு
மன்பைவா னெனவளர்த்தி

அசலமென வுளபுவன மெங்கணு நிலாவுதண்
ணளிவிழி களைப்பரப்பி

அரசது புரிந்திடும் பரமசிவ சண்முகா
னந்தவற் புதவிலாச

அத்துவித பூரணப் பரமரா சாதிரு
வடிச்சமூ கத்தினுக்குச்

சங்கைகொ வித்தைமா நகரிடை வசிக்குஞ்
சதாசிவ மதத்திலுபய

தசவயதி னுட்படப் பாவெனுங் குமரகுரு
தாசனென் போனியன்ற

சாட்டாங்க தண்டன் சமர்ப்பித் தனேகதுதி
தந்தகத் தினும்வணங்கிச்

சரதமா யெழுதிந்த மனுவென்னை யென்னிற்
சதாநா னிருந்துவந்த

தலத்தைக் கடந்துசஞ் சலநகரை யெய்தியதி
சங்கடப் பட்டதற்பின்

சரியில்லை யிங்கிருப் பதுநமக் கென்றெந்
தலத்தினைக் குறுகியெளியேன்

தயைகிளரு மருளையர் தயவுசிறு வரைகொடத்
தலமே யிருந்துகொண்டு

சந்ததமு முறைவதற் கீச்சுவர பத்திமைத்
தம்பத்தை நாட்டியதன்மீ

மங்காத பாசவை ராக்கியவளை போட்டுநிறை
மதியெனுங் கூரைவேய்ந்து

வருகின்ற வமையத்தி னாட்டயன் மருங்குகளில்
வாசமது செய்துவந்த

வஞ்சக மிகுந்தகா மத்தேவ னொருவனிழி
மகனாய முனிவனொருவன்

வன்னெஞ் சுலோபநா யக்கனொரு வன்பொரு
மதச்சேர்வை காரனொருவன்

வசைகொண்மோ காசாரி யொருவனுத வாதபொறை
மங்கப்ப பிள்ளையொருவன்

மாணாதி வருடத்தி னைந்தா றெனப்பகர்
மகாசட்ட திட்டங்களை

மதியாது வந்தவர்க டுட்டநட் டாருடன்
வளைந்துசின் னாபின்னமா

வாய்பேசு முன்னரே பிய்த்துன்னை யாரடா
மனைகட்ட விட்டவரெனாக்

கங்குகரை யில்லா வலாபப் பெருந்திரைக்
கடலிலே யெனையமிழ்த்திக்

கரையேற வொட்டாதம் முனிவனவ் வாழ்கடற்
கரையரு கிருந்துகொண்டு

கையோடு கையறைந் ததரங் கடித்துவிழி

**கள்சிவந் திடவிழித்துக்**

**காட்டிவா தவிடுபொடி யாக்குவ லெனுஞ்செவ்வி**
**கடவுளர் திருக்கருணையாற்**

**கண்ணினுக் கெட்டாம லோடிவந் தேன்விறற்**
**கசடரை விடாதழைத்துக்**

**கழறியுள சட்டப் படிக்குநிமிர் நீதியொரு**
**கடுகளவும் விலகாமலே**

**கண்டித்து ஞாயங் கொடுத்தெனது கண்ணிலுள**
**கம்பலை யொதுங்கியிரியக்**

**கருணா கடாக்ஷவரு ளாலெந்த நாளுநனி**
**காக்கப் பிரார்த்தித்தனே.**

*அங்கம் உடை அங்க தேசத்தில் அளவற்ற அறிவு*
*ஆனந்த வாரி கவியும்*

*அனாதியாய் உள திருவனந்தபுரம் வதி தந்து*
*அதீத மணி மௌலி சூடி*

*அல்லலை ஒழித்து இனிய அமிழ்தத்தை ஊட்டு நிலை*
*அறன் எனும் கோல் பிடித்து உள்*

*அறிவு அரும் பேர் அருளினால் இலகும் ஒரு சுத்த*
*அரியாசனத்தின் இனிது இருந்து*

*அண்டர் அடி பரவிடவும் அன்பர் அகம் மகிழ்வு உறவும்*
*அன்பை வான் என வளர்த்தி*

*அசலம் என உள புவனம் எங்கணும் நிலாவு தண்*
*அளி விழிகளைப் பரப்பி*

*அரசது புரிந்திடும் பரம சிவ சண்முகா*
*னந்த அற்புத விலாச*

*அத்துவித பூரணப் பரமராசா திரு*
*வடிச் சமூகத்தினுக்குச்*

*சங்கைகொள் அவித்தை மாநகரிடை வசிக்கும்*
*சதாசிவ மதத்தில் உபய*

*தச வயதினுட்படு அப்பாவு எனும் குமரகுரு*

தாசன் என்போன் இயன்ற

சாட்டாங்க தண்டன் சமர்பித்து அனேகதுதி
தந்து அகத்தினும் வணங்கிச்

சரதமா எழுது இந்த மனு என்னை என்னில்
சதா நான் இருந்து வந்த

தலத்தைக் கடந்து சஞ்சல நகரை எய்தி அதி
சங்கடப் பட்டதன் பின்

சரி இல்லை இங்கு இருப்பது நமக்கு என்று எம்
தலத்தினைக் குறுகி எளியேன்

தயை கிளரும் அருள் ஐயர் தயவு சிறுவரை கொடு அத
தலமே இருந்து கொண்டு

சந்ததமும் உறைவதற்கு ஈச்சுவர பத்திமைத்
தம் பத்தை நாட்டி அதன்மீ

மங்காத பாச வைராக்கிய வலை போட்டு நிறை
மதி எனும் கூரை வேய்ந்து

வருகின்ற அமையத்தில் நாட்டு அயல் மருங்குகளில்
வாசம் அது செய்து வந்த

வஞ்சகம் மிகுந்த காமத்தேவன் ஒருவன் இழி
மகன் ஆய முனிவன் ஒருவன்

வன் நெஞ்சு உலோப நாயக்கன் ஒருவன் பொரு
மதச் சேர்வைகாரன் ஒருவன்

வசைகொள் மோக ஆசாரி ஒருவன் உதவாத பொறை
மங்கப்ப பிள்ளை ஒருவன்

மாண் ஆதி வருடத்தில் ஐந்து ஆறு எனப்பகர்
மகா சட்ட திட்டங்களை

மதியாது வந்து அவர்கள் துட்ட நட்டாருடன்
வளைந்து சின்னா பின்னமா

வாய் பேசும் முன்னரே பிய்த்து உன்னை யாரடா
மனைகட்ட விட்டவர் எனாக்

*கங்குகரை இல்லா அலாபப் பெருந்திரைக்*
*கடலிலே எனை அமிழ்த்திக்*

*கரை ஏற ஒட்டாது அம்முனிவன் அவ் ஆழ்கடல்*
*கரை அருகு இருந்து கொண்டு*

*கையோடு கை அறைந்து அதரம் கடித்து விழி*
*கள் சிவந்திட விழித்துக்*
*காட்டி வா தவிடு பொடி ஆக்குவல் எனும் செவ்வி*
*கடவுளர் திருக்கருணையால்*

*கண்ணினுக்கு எட்டாமல் ஓடி வந்தேன் விறல்*
*கசடரை விடாது அழைத்துக்*

*கழறியுள சட்டப் படிக்கு நிமிர்நீதி ஒரு*
*கடுகளவும் விலகாமலே*

*கண்டித்து ஞாயம் கொடுத்து எனது கண்ணில் உள*
*கம்பலை ஒதுங்கி இரியக்*

*கருணா கடாக்ஷ அருளால் எந்த நாளும் நனி*
*காக்கப் பிரார்த்தித்தனே.*

அங்கம் உடைய அங்க தேசத்தில், அளவற்ற அறிவும் ஆனந்தமுமான கடல்கள் சூழ்ந்திருக்கும் அனாதியாக உள்ள திருவனந்தபுரத்தில் வாழ்ந்து, அதீத மணிமுடி சூடித் துன்பத்தை ஒழித்து, இனிய அமிழ்தத்தை ஊட்டும் நிலையான அறம் என்னும் செங்கோலைப் பிடித்துத் திருவுளத்தில் அறிதற்கரிய பேரருளினால் விளங்கும் ஒரு தூய சிம்மாசனத்தில் இனிது இருந்து, தேவர்கள் திருவடிகளை வணங்கவும் அன்பர்கள் மனம் மகிழ்ச்சி அடையவும், அன்பை ஆகாயம் என வளரச் செய்து அசையாதவை எனப்படும் உலகம் எங்கும் நிலவுகின்ற குளிர்ந்த அருள் பார்வைகளைப் பரப்பி அரசு புரிந்துவரும் பரமனே! சிவனே! சண்முகானந்தா! ! அற்புதவிலாச !இரண்டற்ற முழுமையான பரமராசனே !உன் திருவடிச் சமூகத்திற்கு ஐயம் கொள்ளும் அறியாமை மாநகரில் வசிக்கும் சதாசிவமதத்தவனும், இருபது வயதுக்குட்பட்டவனும், அப்பாவு என்னும் குமாரகுருதாசன் என்போன் ஆகிய நான், முடிந்த அளவு சாஷ்டாங்கமாய் வீழ்ந்து வணங்கிச் சமர்ப்பித்தேன்; அநேக துதிகள் செய்தேன்; மனத்துள்ளும் வணங்கினேன்; வணங்கி உண்மையாக எழுதும் இந்த மனு என்னவென்றால், எக்காலத்தும் நான் வாழ்ந்து வந்த சொந்த ஊரை விட்டுத் துன்ப நகரை அடைந்து, அங்கு அதிகமான சங்கடங்களை அனுபவித்த பின்பு, நமக்கு இங்குத் தங்குவது சரியாகாது என்று எமது ஊரைச் சார்ந்து, எளியேன் கருணை விளங்கும் அருள் ஐயர் தயவு சிறிதளவு கொண்டு அவ்வூரிலேயே இருந்து கொண்டு, எப்போதும் வாழ்வதற்காக ஈசுவரபத்தி என்னும் தூணை நிறுத்தி, அதன்மேல் குறையாத பாச வைராக்கியம் எனும் வளை போட்டு, நிறைந்த அறிவு என்னும் கூரை வேய்ந்து வருகின்ற சமயத்தில், நாட்டின் புறங்களில் உள்ள இடங்களில் வசித்து வந்த வஞ்சகம் மிகுந்த காமத்தேவன் என்னும் ஒருவன், இழிந்தவனான முனிவன் (கோபம்) ஒருவன், வலியமனம் உடைய உலோபியான நாயக்கன் ஒருவன், போர் செய்யும் மதச் சேர்வைகாரன் ஒருவன், பழியைக் கொள்ளும் மோக ஆசாரி ஒருவன், உதவாத பொறுமை இல்லாதவனான பொறை மங்கப் பிள்ளை ஒருவன், மாட்சிமிக்க முன் வருடத்தில் ஐந்து ஆறு

எனக் கூறப்படும் பெரிய சட்டதிட்டங்களை மதிக்காமல் வந்து, அவர்கள் துஷ்ட குணமுடைய நாட்டாருடன் கூடி நான் அவர்களிடம் உண்மை நிலை எடுத்துக் கூறும் முன்பே, உருத் தெரியாமல் கேடு இழைத்து, (பிய்த்துப்போட்டு ('உன்னை இங்கு வீடு கட்ட விட்டவர் யாரடா?' என்று கேட்டு, கரையில்லாத தீமையான பெரிய அலைகளுடைய கடலில் என்னை அமிழ்த்திக் கரையேறவிடாமல், அம்முனிவன் அந்த ஆழ்கடலின் கரையில் இருந்து கொண்டு கையோடு கையை அறைந்து, உதட்டைக் கடித்துக் கண்கள் சிவந்திடப் பார்த்துக் காட்டி "வா உன்னைத் தவிடு பொடி ஆக்குவேன்" என்று கூறிய சமயம் கடவுளரின் திருக்கருணையால் கண் பார்வைக்கு எட்டாத தூரத்திற்கு ஓடி வந்தேன்; வலிய கசடர்களைத் தப்ப விடாமல், அழைத்துக் கூறப்பட்டுள்ள சட்டப்படிக்குச் சரியான நீதியை ஒரு கடுகளவும் விலகாமல், அவர்களுக்குத் தண்டனை வழங்கி, எனக்கு நியாயம் வழங்கி என் கண்களிலுள்ள துன்பங்கள் விலகி ஒழியக் கருணாகடாக்ஷ அருளால், எந்த நாளும் நன்கு என்னைக் காத்தருளும்படி வேண்டுகிறேன்!